# பூமணியின் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள்
# Family Issues in Poomani's Novels

**முனைவர் க. வினோத்குமார்,** 47/106, கலைமகள் தெரு போடிநாயக்கன்பட்டி,சேலம் - 636 005
**Dr. K. Vinodhkumar,** 47/106 Kalaimagal street, Bodinaickenpatty, Salem - 636 005

**DOI : 10.5281/zenodo.7001962**

**Abstract**

Family is an essential social institution in society. Family is the root and foundation of society. The family is the symbol that brought the man who lived like an animal in the beginning to a civilized state. It is the family system that reflects the culture of a society. An individual forms a family through marriage. Family is the cause of society formation. It is the family system that helps man to live on the right path so that he does not get down from his position and does not deviate from the positions of love, compassion, affection, discipline etc. Through the family system man can get his needs in the right way.

**ஆய்வுச்சுருக்கம்**

குடும்பம் என்பது சமுதாயத்தில் இன்றியமையாத சமூக நிறுவனமாகத் திகழ்கிறது. குடும்பமே சமூகத்தின் ஆணிவேராகவும், அடித்தளமாகவும் அமைகிறது. ஆதிகாலத்தில் விலங்குபோல் வாழ்ந்து வந்த மனிதனை நாகரிக நிலைக்குக் கொண்டு வந்த அடையாளமே குடும்பம் ஆகும். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை, கலாச்சாரத்தை உணர்த்துவது குடும்பம் என்ற அமைப்பேயாகும்.

தனிமனிதன் திருமணத்தின் மூலம் குடும்பத்தை உருவாக்கிக் கொள்கிறான். குடும்பமே சமுதாய உருவாக்கத்திற்குக் காரணமாகிறது. மனிதன் தன் நிலையிலிருந்து தாழ்ச்சி அடையாமலும் அன்பு, பரிவு, பாசம், ஒழுக்கம் போன்ற நிலைகளிலிருந்து தவறாமலும் சரியான பாதையில் வாழத் துணைச் செய்வது குடும்ப அமைப்பே ஆகும். குடும்ப அமைப்பின் மூலம் மனிதன் தன்னுடையத் தேவைகளைச் சரியான வழியில் பெற முடிகின்றது.

> "குடும்பமே சமூகத்தின் மிகச்சிறிய ஆனால் அதிநெருக்கமான குழுவாகியுள்ளது. இங்குதான் மனிதவர்க்கத்தினுடைய ஒற்றுமை, பாசம் போன்ற உன்னத ஆசைகளும் தேவைகளும் முழுமையாக திருப்தி பெறுகிறது"(சி.என். குமாரசாமி, பெண்ணிய நோக்கில் பாரதி, ப.192.)

என்ற கருத்துவழி மனிதன் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், தனது எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் உருவாக்கிக் கொண்ட ஓர் அமைப்பு குடும்பம் என்பது புலனாகின்றது.

**குடும்பம் - விளக்கம்**

குடும்பம் என்பது திருமணத்தின் மூலம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலையான, நெருக்கமான இணைப்பினால் அவிழ்க்க முடியாதபடி பிணைக்கப்பட்ட ஒன்று என்பதனை,

"குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபுப்படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையால் மட்டுமே தோன்றமுடியும். அவ்வாறு இணைந்தால்தான் அச்சமுதாயத்தில் அவர்கள் குடும்பமாக ஏற்றுக்கொள்ளப்படுவர். அவ்வாறன்றி ஒரே வீட்டில் ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ வேறு வகையிலோ உறவு பெற்று உண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணவன் - மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தவியலாது"(சீ.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், பக். 336-337)

என்ற கருத்துப் புலப்படுத்துகிறது. குடும்பம் என்ற அமைப்பிற்குத்திருமணத்தின் மூலம் அமையக்கூடிய கணவன் - மனைவி உறவே காரணமானது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

தனிமனிதன் வாழ்விலிருந்து குடும்பம் என்ற பிணைப்பு உண்டாகின்றது. இக்குடும்பம் சமூகத்தோடு உறவாடுகிறது என்பதை,

"குடும்பம் மரபு வழிப்பட்ட ஒரு நிறுவனம். சமுதாய அமைப்பிற்கு இதுவே அடிப்படையாக விளங்குகிறது"(அ.மு.பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், ப.72)

என்று பரமசிவானந்தம் குடும்பம் குறித்து விளக்கம் அளிக்கிறார்.

**குடும்பத்தின் வகைகள்**

குடும்பஅமைப்பினைக் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப்படுத்துவர்.

**கூட்டுக் குடும்பம்**

கூட்டுக்குடும்பம் என்பது ஒரே இரத்த சம்பந்தமுடையவர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வதனைக் குறிப்பதாகும். ஒன்றுக்கு மேற்பட்ட தம்பதியர்களை உள்ளடக்கியது கூட்டுக்குடும்பம் ஆகும். கூட்டுக் குடும்ப அமைப்பே காலத்தால் முற்பட்டதாகும். கூட்டுக்குடும்பம் குறித்து இராமநாதன்,

"ஒரே மரபு வழி சார்ந்த இரத்தஉறவுடைய இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ ஒரேவீட்டில் ஒரே தலைமையின்கீழ் தங்கள் மனைவியர்களுடனும் குழந்தைகளுடனும் கூடி வாழ்தலையே கூட்டுக்குடும்பம்"( ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.58)

என்று விளக்கமளிக்கிறார்.

கூட்டுக்குடும்பத்தின் சிதைவே தனிக்குடும்பத் தோற்றத்திற்கு மூலவித்தாக அமைகிறது எனலாம்.

**தனிக்குடும்பம்**

ஒரு கணவன் மனைவியை அடிப்படை அலகாகக் கொண்டு விளங்குவது தனிக்குடும்ப அமைப்பாகும். கணவன் மனைவிக்குக் குழந்தைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தக் குடும்ப அமைப்பு தனிக்குடும்பம் ஆகும்.

"குடும்பத்தின் மூலக்கூறுகளான கணவன், மனைவி ஆகிய இருவரோட அவர்தம் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தைத் தனிக்குடும்பம்"(ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.58)

என்பர். குடும்பத்தில் உள்ள ஆண்குழந்தைகள் வளர்ந்து, திருமணம் செய்யும் வரை தனிக்குடும்ப அமைப்பு, மகனின் திருமணம் முடிந்ததுடன் தனிக்குடும்பம் கூட்டுக்குடும்ப அமைப்புமுறைக்கு வருகின்றது.

குடும்பத்தின் தலைமையிடம் குறை காணும்போதும், ஒருவரின் தேவையை மற்றவர் நிறைவேற்றி வைக்காதபோதும், ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளாத நிலையிலும் குடும்ப உறவுகளுக்கிடையே சிக்கல் உருவாகின்றது. குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களைப் பூமணி நாவல்கள்வழி ஆராய்வதாக இவ்வியல் அமைகின்றது. குடும்ப உறவுகளுக்குள் தோன்றும் சிக்கல்களை,

**கணவன் மனைவி உறவுச்சிக்கல்கள்**

குடும்ப அமைப்பில் கணவன் மனைவி இருவரும் சம உரிமையுடையவர்களாக இருந்து ஒருவரையொருவர் மதித்துவாழ்தல் வேண்டும். கணவன் - மனைவி இணைந்து வாழும் இத்தகைய குடும்ப வாழ்க்கையே சிறந்ததாகக் கருதப்படும். நமது நடைமுறை வாழ்வில் பின்பற்றிவரும் விதிமுறைகள் பெண்களுக்குப் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றன. ஆண்களுக்கு எவ்விதப் பாதிப்பினையும் ஏற்படுத்துவதில்லை. குடும்பத்தில் ஆணின் தேவைகளை நிறைவேற்றி வைக்கின்ற இயந்திரங்களாகவே பெண்கள் வாழ்ந்து வருகின்றனர்.

திருமணமானபின் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் உறவுமுறையே கணவன்-மனைவி உறவு ஆகும். குடும்பத்திலுள்ள அன்புறவுகளில் கணவன் மனைவி உறவே தலையாயது. திருமணத்தின் மூலம் இணைந்த கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் சமமதிப்புக் கொடுப்பவராகவிளங்க வேண்டும். அவ்வாறு இணைந்து வாழும் குடும்ப வாழ்க்கையே வெற்றிபெற்ற வாழ்க்கையாகக் கருத இடமுண்டு. மாறாக கணவனின் ஆளுமை தலையெடுக்கும் பொழுதோ, அல்லது மனைவியின் தலைமைப்பண்பு தலைத்தூக்கும் போதோ கணவன் மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது. இவ்வுறவுச் சிக்கலுக்கான காரணங்களாக,

i) ஒழுக்கக்குறைவு

ii) ஆதிக்க உணர்வு

iii) ஐய உணர்வு

iv) குழந்தையின்மை

v) தகுதி வேறுபாடு

முதலியவை அமைந்திருப்பதை நாவல் வழி ஆராய்வதாக இப்பகுதி அமைகின்றது.

**ஒழுக்கக் குறைவு**

'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதே தமிழர் போற்றிப் பாதுகாத்துவரும் பண்பாட்டு நெறியாகும். கணவனோ மனைவியோ அவ்வொழுக்கத்திலிருந்து விலகி நடக்கும் பொழுது கணவன் மனைவி உறவில் சிக்கலை ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்லாமல், இஃது சமுதாய சீர்கேடாகவும் திகழ்வதனை வள்ளுவரும்,

"பிறன்மனை நோக்கா பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" - குறள்.148

என்ற குறட்பாவில் சான்றோர்க்கு உரியதான ஒழுக்கம் குறித்துக் குறிப்பிட்டுள்ளார். ஆண் பிற பெண்ணையோ அல்லது பெண் பிறஆணையோ நாடுதல் ஒழுக்கக்குறைவு ஆகும். பூமணியும் தன்னுடைய நாவலில் கணவன்-மனைவி உறவில் ஏற்படும் ஒழுக்கக்கேட்டினைக் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார்.

**கணவனின் ஒழுக்கக் குறைவு**

கணவனிடம் காணப்படும் ஒழுக்கக் குறைவினால் மனைவி கணவனை விட்டுப்பிரிவதும், வெறுப்பதும் குடும்ப உறவில் விரிசலை ஏற்படுத்துகின்றது. கணவன் பிறபெண்களுடன் தொடர்புகொள்வதால் ஒழுக்கச் சிதைவடைகிறான். கணவனின் ஒழுக்கக்கேட்டால் மனைவி குடும்பப் பொறுப்புகளைத் தனியொருத்தியாக கவனிக்கவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். திருமணம் என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் முடிவான தீர்ப்பு, மாற்றமுடியாத சமூகவிதி. கணவன் கெட்டவனானாலும் அவனுடன் வாழ்ந்தே தீரவேண்டிய கட்டாயம் காலம்காலமாகப் பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ளன. பிள்ளைகளின் நலனுக்காகவும், குடும்பத்தின் நலனுக்காகவும் பெண் குடும்பப் பொறுப்புகளைத் தனியொருவளாக ஏற்றுக் கொண்ட நிர்வகிக்கின்ற போக்கினைப் பலகுடும்பங்களில் காணமுடிகிறது. ஆணின் பொறுப்பற்ற நிலையினையும் பெண்ணின் கூடுதல் சுமை குறித்தும் ராஜம் கிருஷ்ணன்,

> “ஆண் வர்க்கம் தனக்குச் சாதகமாகப் பல கோட்பாடுகளை, நீதிநெறிகளைக் காலம்காலமாக உருவாக்கிப் பெண் இனத்தையே பல கூறுகளாக்கி, அவர்களின் மனித உணர்வுகளையே கொன்றழித்து ஆளுகை செய்து கொண்டிருக்கிறதென்றால் தவறில்லை" (ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண், ப.38)

என்று கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.

'நைவேத்யம்' நாவலில் இடம்பெறும் அக்ரஹாரத்தைச் சார்ந்த சுப்புடு, மனைவி குழந்தைகளைப் பற்றிய நினைவு சிறிதும் இல்லாமல், மீனாவுடனான தொடர்பிலேயே மூழ்கிக் கிடக்கிறான். கணவனின் வருமானம் இல்லாமல் குடும்பத்தைக் கவனிக்கமுடியாமல் காந்திமதி தனியாளாகத் துன்பப்படுகிறாள். சுப்புடுவோ எதைப் பற்றியும் கவலைக்கொள்ளாமல், மீனாவின் வீடே தஞ்சம் என்று பொழுதைக் கழிக்கிறான். பிள்ளைகள் உணவின்றி துன்பப்படும் போது கணவன் மட்டும் மீனா வீட்டில் வயிறார உண்டு இன்பத்தில் திளைத்திருப்பது காந்திமதிக்கு வருத்தத்தை அதிகரிக்கிறது. கணவனைத் திருத்திட முடியாமல் வேறுவழியின்றி தாய் வீட்டிற்குச் செல்கிறாள். கணவனின் தவறான தொடர்பு, கணவன் மனைவி உறவில் பிரிவினை ஏற்படுத்துகிறது. இதனை,

> “காந்திமதி பொறுமையுடன் இருந்தாள். ரெண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு குடும்பத்தை சாமர்த்தியமாகச் சமாளித்தாள். சுப்புடுவின் நடவடிக்கைகள் அவளுக்கு அறவே பிடிக்கவில்லை....
>
> “கொழந்தைக பட்டினியா இருக்கறச்சே அடுத்தாத்துல பிச்சையெடுக்கறேளே".
>
> சுப்புடு அசையவில்லை.
>
> அவள் மனக்கொதிப்பில் குழந்தைகளுடன் பிறந்தகம் போய்விட்டாள்"

(பூமணி, பூமணியின் ஐந்து நாவல்கள், ப.385)

என்ற கருத்துவழி புலப்படுத்துகிறார் பூமணி. இதன்வழி கணவனின் ஒழுக்கக் குறைவால், கணவன் மனைவி உறவில் அமைதி குழைந்து விரிசல் ஏற்படுவதோடு, பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக்குறியாக்கப்படுவதை அறியமுடிகின்றது. கணவன் தன்னுடைய இன்பத்திற்கு மதிப்புக் கொடுத்து தன்னலமாகச் செயல்படுவதால் உறவுகளுக்குள் பெரும்விரிசல் உண்டாவதை இதன்வழி உய்த்துணரமுடிகின்றது.

**மனைவியின் ஒழுக்கக்குறைவு**

குடும்பவாழ்வில் துன்பங்கள், துயரங்கள் குறைகள் ஆகியன வருத்தும்போது கணவன் மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்தலே உயர்வாகும். கணவனோடு இணைந்து குடும்பத்தின் பெருமையை உயர்த்துபவள் மனைவி. குடும்பத்தில் ஏற்படும் சோதனைகளைச் சாதனைகளாக்கி உறவுகள் சிதறாமல் கட்டிக்காப்பவளும் மனைவியே ஆவாள். மாறாக, மனைவி தன்னுடைய உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் பொழுது குடும்பம் சிதைவடைவதுடன், சமூகமதிப்பு அற்றவளாகவும் கருதப்படுகிறாள்.

கணவன் பிறமகளிருடன் தொடர்பு கொள்வதால் ஏற்படும் வெறுப்புணர்வால், மனைவி அவனைப் பழிவாங்கும் நோக்கத்தோடு பிற ஆடவனுடன் தொடர்பு கொள்வதை 'அஞ்ஞாடி' நாவலில் காணமுடிகிறது. கட்டப்பஞ்சாயத்து மூலம் ஊர்மக்களை அச்சுறுத்திப் பிழைப்பை நடத்திவரும் சின்னக்குருவன் என்பவன் பிற பெண்களுடனான தொடர்பால் மனைவியை மறந்து, வருமானம் முழுவதையும் விலைமாதருக்கே செலவழித்து இன்பம் துய்த்துவருகிறான். மனைவியைப் பற்றிய நினைப்பு சிறிதும் இல்லாதவனாய் வாழ்ந்து வருகிறான். கணவனின் நடவடிக்கையால் வெறுப்படைந்த மனைவி கணவனைப் பழிவாங்க வேண்டும் என்று ஒழுக்கக்கேடான செயலில் ஈடுபடுகிறாள். கணவனைப் பழிதீர்க்க மனைவி பிற ஆடவனைத் தேடிச் செல்கின்ற ஒழுக்கக்கேட்டினைக் குறித்து,

> "கொழுப்பெடுத்துப் போயி ஊரூருக்கு வங்கணம் வச்சுக்கிட்டுத் திரிஞ்சா ஆருதான் சகிச்சுக்கிட்ருப்பா. சரியா வீட்டுக்குப் போறதில்ல. கையில கெடச்சத கள்ளப் பொண்டாட்டிக்குக் குடுக்கிறது."
>
> "பொண்டாட்டிக்காரி தனக்குத் தோணுனபடி ஒரு முடிவெடுத்துக்கிட்டா. ஒனக்கு ஒரு தொடுப்புக் கெடச்சா எனக்கு ஒரு வப்புக் கெடைக்காமயா போயிரும்னு உள்ளூருலயே குடும்பன் ஒருத்தனக் கையில புடிச்சுக்கிட்டா."

(பூமணி, அஞ்ஞாடி, ப.335)

என்ற கருத்தின் வழி விளக்குகின்றார் பூமணி. கணவன் மனைவி இருவரும் நெறி பிறழ்ந்து ஒழுக்கக்கேட்டில் ஈடுபடுவதால், குடும்பம் என்ற அமைப்பு முற்றிலுமாக சிதைவடைந்து சீர்கேடு அடைகின்றது. கணவனின் ஒழுக்கக்கேடு குடும்பத்தை மட்டுமே பாதிக்கிறது. மனைவி குடும்ப உறவிலிருந்து விலகி ஒழுக்கக்கேட்டிற்கு ஆளாகும்போது, ஒட்டுமொத்த சமூகத்தையுமே அது

பாதிப்புக்குள்ளாக்குகின்றது. கணவனின் தவறான நடத்தைகள் மனைவியின் ஒழுக்கக்கேட்டிற்குக்காரணமாக அமைவதை நாவல்வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

**சந்தேக உணர்வு**

குடும்பவாழ்வின் அமைதியைக் குலைக்கும் காரணிகளில் ஒன்று சந்தேகம் ஆகும். அன்பும் அறனும் இல்லறவாழ்விற்கு எவ்வளவு இன்றியமையாததோ, அதுபோல நம்பிக்கையும் இல்லறம் நல்லறமாக அமைய இன்றியமையாதது ஆகும். நம்பிக்கை குறைந்து சந்தேகம் முளைவிடத் தொடங்கும்போது குடும்பத்தில் சிக்கல்கள் தலைகாட்டத் தொடங்குகின்றன. கணவன் மனைவி உறவில் சந்தேகம் களையப்பட வேண்டிய ஒன்றாகும். கணவனது நடத்தையை மனைவி சந்தேகித்தல், மனைவியைக் கணவன் சந்தேகித்தல் என இருவரிடம் சந்தேகக்குணம் தலைதூக்கும்போது கணவன் மனைவி உறவில் அன்பு குறைந்து விரிசல் உண்டாகிறது.

**கணவனின் சந்தேக உணர்வு**

ஒரு பெண் திருமணத்திற்கு முன்போ அல்லது திருமணத்திற்குப் பின்போ ஓர் ஆணால் ஏமாற்றப்பட்டு, கைவிடப்பட்டால் அவளது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடுகின்றது. அப்பெண் மீண்டும் ஓர் ஆடவனைத் திருமணம் செய்யவேண்டி வரும்பொழுது தனது கடந்தகால வாழ்க்கையை நினைத்து பெரும் குழப்பத்திற்கு ஆளாகிறாள். இப்படிப்பட்ட நிலையில் அப்பெண்ணைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொண்டு, அப்பெண்ணை மணக்கவரும் ஆடவன் திருமணத்திற்குப் பின், அப்பெண்ணின் கடந்தகால வாழ்க்கையை மனதில் வைத்துக் கொண்டு, சந்தேகிக்கும் நிலையினைச் சமூகத்தில் இன்றளவும் காணமுடிகின்றது.

'பிறகு' நாவலில் வரும் முத்துமாரி முதல் கணவனின் ஆதிக்கமனப்பான்மையால் அவனிடமிருந்து மணவிலக்குப் பெற்று, மகன் சுடலையையும் பிரிந்து, பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வருகிறாள். பெற்றோரின் வற்புறுத்தலின் பேரில் முனியாண்டியை இரண்டாவது திருமணம் செய்து கொள்கிறாள். மனைவியின் கடந்த காலத்தை நன்கு அறிந்திருந்தும், முனியாண்டி முத்துமாரியின் குழந்தையான சுடலையை ஏற்க மறுக்கிறான். முதல் கணவனின் பெற்றோரிடம் வளரும் குழந்தை அவர்களின் இறப்பிற்குப்பின் முத்துமாரியிடமே தஞ்சம் புகுகிறது. சுடலையின் வருகையால் முனியாண்டி மனைவியின் நடத்தை மீது சந்தேகம் கொள்கிறான். முதல் கணவனுடன் தொடர்பு இருப்பதால்தான் அவனுக்குப் பிறந்த குழந்தையைத் தன்னுடனே அழைத்து வைத்துக்கொண்டாள் என்ற தவறான எண்ணத்தில் மனைவி மீது வெறுப்பு கொள்கிறான். இதனை நாவலில்,

> "எவனோ செவல்பட்டியானுக்குப் பெத்தத இழுத்துட்டு வந்துருக்கால்ல. சே இப்பிடிக் கழுதன்னு தெரிஞ்சிருந்தா கண்ணுல முழிச்சிருப்பனா. நான் எம்புட்டுப் பெருந்தன்மையா இருந்தென். என் வீட்ல இவ அரச்சணம் இருக்கப்புடாது எங்கயாச்சும் ஓடிப்போகணும்"
>
> (பூமணி, பூமணியின் ஐந்து நாவல்கள், ப.165)

என்று மனைவியை அடித்து துன்புறுத்தி வீட்டைவிட்டே அனுப்புகின்ற நிலையைப் படம்பிடித்துக்காட்டுகின்றார். ஒருமுறை வாழ்க்கையில் தவறிவிழுந்த முத்துமாரி, இரண்டாவது வாழ்க்கையாவது மகிழ்ச்சியாக அமையும் என்று பலகனவுகளுடன் வாழ்க்கையைத் தொடங்குகிறாள். சந்தோசமான வாழ்க்கையில் கணவனின் சந்தேக எண்ணத்தால் மனமுடைந்த

முத்துமாரி வேறுவழியின்றி தற்கொலை முடிவை நாடி செல்கிறாள். கணவனின் சந்தேகப்போக்கால் மனைவி தவறான முடிவை நாடுவதைப் பூமணி 'பிறகு' நாவலில் பதிவுசெய்துள்ளார். பெண்ணின் கடந்தகால வாழ்க்கையினை முழுமையாகத் தெரிந்துகொண்டு அப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும் ஆண், நாளடைவில் சந்தேகக்குணம் கொண்டவனாக மாறுவதால் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படுகிறது.

சந்தேகக்குணம் கொண்ட ஆண் கணவனாக அமையும் பொழுது பெண் தன்னுடைய ஒழுக்கநெறியை நாள்தோறும் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். இப்படிப்பட்ட சூழல் அமையும் பொழுது பெண் தவறான முடிவைத் தேடிக் கொள்ளாமல், குடும்ப வாழ்விலிருந்து விலகி தனித்து வாழ்வதே சிறந்தது என்பதை,

> “நமது திருமணம் பெண்களைக் கொன்றொழித்து விட்டது தமிழர்களே! கொலை செய்துவிட்டது. அவர்கள் திருமணம் அவனுக்கும் அவளுக்கும் நரகமான பின்னும் தம்பதிகளாய் வாழவேண்டிய அவசியம் என்ன? நான் மணவிலக்கை ஆதரிக்கின்றேன். மணவிலக்கு ஒரு பெண்ணிற்குச் சுதந்திரமும் சந்தோசமும் அளிக்கும் என்றால் நான் மணவிலக்கை ஆதரிக்கின்றேன். ஆயிரம் தடவை ஆதரிக்கிறேன்."(பிரபஞ்சன், ஒரு சினேகத்தின் கதை முன்னுரை, ப.3)

என்ற கருத்துவழி புலப்படுத்துகிறார் பிரபஞ்சன். அறியாமையில் மூழ்கி, தவறானப் பாதையை நாடிச் செல்லாமல் பெண்கள் தன்னிச்சையாக செயல்பட வேண்டும்.சந்தேகக் குணம் கொண்ட கணவனிடமிருந்து மணவிலக்குப் பெற்று சுதந்திரமாக வாழும் தன்னம்பிக்கையைப் பெண்சமுதாயம் கைக்கொள்ளவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

**மனைவியின் சந்தேக உணர்வு**

கணவன் தன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதளவில் எண்ணுவதைக் கூட மனைவி ஏற்றுக்கொள்வதில்லை. கணவன் தனக்கு மட்டும் உரியவனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மனைவியின் இயல்பு. கணவன் மீது அவனின் தாய், தங்கை போன்ற இரத்த உறவுகள் அன்பு செலுத்துவதைக் கூட மனைவி விரும்புவதில்லை. வெளியுலகத் தொடர்பால் கணவன் தன்னைவிட்டும், குடும்பத்தைவிட்டும் விலகிச் செல்ல நேரிடும் என்ற மனைவியின் தேவையற்ற அச்சம் கணவன் மனைவி உறவில் விரிசலை உண்டாக்குவதை 'அஞ்ஞாடி' நாவல் வழி அறியமுடிகிறது.

'அஞ்ஞாடி' நாவலில் வரும் சுந்தரநாய்க்கர் மாமானாரின் தோட்டத்தைக் கவனித்து வருகிறார். தோட்டத்தில் வேலை செய்யும் முத்தம்மாளின் குழந்தையான சீனித்தாயிடம் இயல்பாகப் பேசி, விளையாடி மகிழ்வது மனைவிக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. தோட்டத்தைப் பார்வையிட வரும் மங்கத்தாய், கணவனின் விளையாட்டைக் கண்டு, குழந்தையின் தாய்க்கும், சுந்தர நாய்க்கருக்கும் தொடர்பு இருப்பதாக எண்ணி வருத்தமடைகிறாள். கணவனை முத்தம்மாளுடன் இணைத்து பேசி அவமானப்படுத்துகிறாள். முத்தம்மாளைத் தரக்குறைவாகப் பேசுவதை,

"எடங்குடுத்தா மடங்கேக்கிற எடுப்பெடுத்த நாயி. இப்படியொரு பெழப்பு வேணுமாக்கும். இனிமே என் நெலத்துல காலுவச்சாத் தறிச்சுப் போட்ருவென்"

(பூமணி, அஞ்ஞாடி, ப.947)

என்ற வரிகள் விளக்கும் விதமாக அமைகின்றன. கணவன் மீதிருக்கும் அதிகபடியான அன்பால், கணவன் யாரிடம் பேசினாலும் சந்தேகக் கண்கொண்டு தரக்குறைவாகப் பேசுவதை மங்கத்தாய் வழி அறியமுடிகின்றது. முத்தம்மாளின் குழந்தை மீது சுந்தரநாய்க்கர் வைத்த அன்பினைத் தவறுதலாக எண்ணி, அவளையும், அவளின் குழந்தையையும் அவமரியாதைக்கு உள்ளாக்குகிறாள் மங்கத்தாய். இதனைப் பூமணி, நாவலில்

"ஏதேது நாளைக்கு எஞ்சொத்துல பங்குகேட்டு வந்து நின்னாலும் நிப்ப. ஒ.ஞ் சங்காத்தம் போதும். எல்லாருமாச் சேந்து இப்படியா திட்டம் போடுறீக...."

(மேலது, ப.948)

என்ற வரிகளில் புலப்படுத்துகின்றார். நாயக்கர் மனைவியை எதிர்த்துப் பேசமுடியாமல் அமைதியாக இருக்கிறார். முத்தம்மாள் தனக்காக மனைவியை எதிர்த்துப் பேசாமல்,மௌனம் காக்கும் நாய்க்கரின் நிலைக்காக வருந்துகிறாள். நாயக்கரின் இந்நிலையைக் கண்டும் அவப்பெயராலும் முத்தம்மாள் உயிரை விடுகிறாள். மனைவியின் தேவையற்ற சந்தேகத்தால் முத்தம்மாள் உயிர் பிரிந்தமையாலும், முத்தம்மாளுக்காக மறுமொழி பேசாத தன்னிலைக் கண்டும் வருந்தி, மனைவியுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துசெல்கிறார். மனைவியின் சந்தேகத்தால் உயிர்சேதம் ஏற்பட்டதோடு கணவனையும் பிரிய நேரிடுகிறது.

**தகுதி வேறுபாடு**

கணவன் மனைவியிடையே விரிசல் ஏற்படுவதற்குத் தகுதி வேறுபாடு முக்கிய காரணமாக அமைகின்றது. பொருளாதாரத்தில் மேம்பட்ட ஆணோ பெண்ணோ, தங்களைவிடப் பின்தங்கிய வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து குடும்பமாகும்போது, அவர்களுடைய வாழ்வில் சிக்கல் ஏற்படுகின்றது. அந்தஸ்து ரீதியாக உயர்ந்தவர்கள், தங்களை மேலாகவும், மற்றவரைக் கீழாகவும் எண்ணுகின்ற மனப்பான்மை கணவன் மனைவி உறவில் பிரிவினை உண்டாக்குகிறது. சரிநிகர் சமானமாகக்கருதப்படவேண்டிய கணவன் மனைவியிடையே உயர்வுதாழ்வு என்ற எண்ணப்போக்கானது மனச்சிதைவிற்கும் குடும்பச்சிதைவிற்கும் காரணமாகின்றது.

அழகு, கல்வி, பணம், பதவி, சாதி என்ற நிலைகளில் உயர்வு தாழ்வு மனப்பான்மை உருவாகின்றது. கணவன் மனைவி இருவருள் ஒருவரிடம் மேற்சுட்டியவற்றுள் ஒன்று மிக்கும் ஒன்று குறைந்தும் இருக்கும்பொழுது இருப்பவர் இல்லாதவரைத் தரக்குறைவாகப் பேசவோ, மதிப்பிடவோ, அலட்சியப்படுத்தவோ இடமேற்படுகின்றது.

"நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்த இளைஞர்கள் கல்வியறிவு பெற்று உயர் பதவிகளை அடையும்போது, உயர்வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் சுய இலாபநோக்கில் தங்கள் அந்தஸ்து நிலையிலிருந்து கீழறங்கி வந்து அவர்களுடன் மணஉறவு வைத்துக் கொள்கின்றனர். இவ்வாறு கணவனும் மனைவியும் வெவ்வேறு வர்க்கத்தைச் சார்ந்திருப்பது தவிர்க்க இயலாதாகி விடுகிறது. இந்த நிலையில் மேல்வர்க்கத்தினருக்கும் கீழ்

வர்க்கத்தினர்களுக்குமிடையே ஒத்துப் போவதில்லை"(நா.வேலம்மாள், தமிழ் நாவல்களில் பொருளாதாரச் சிக்கல்கள், ப.172)

என்ற கருத்தானது இதனை மெய்ப்பிக்கும் விதமாக அமைகின்றது.

**கணவனை மதிக்காத நிலை**

அஞ்ஞாடி நாவலில் வரும் சுந்தரநாய்க்கர் எளிமையான குடும்பத்தைச் சார்ந்தவர். வசதிபடைத்த மாமன் மகளான மங்கத்தாயைக் காதல்மணம் புரிந்து வீட்டோடு மாப்பிள்ளையாகி, பொறுப்புகளைக் கவனித்துக்கொள்கிறார். ஆரம்பத்தில் கணவனின் மீது அன்பு கொண்டிருந்த மங்கத்தாய். ஆடம்பர வாழ்க்கைக்குத் தேவையான வசதியைக் கணவன் ஏற்படுத்தித் தராததால், அவனைக் கீழாக எண்ணத் தொடங்குகிறாள். திருமணத்திற்குப் பின்னர் தன்னுடைய தேவைகளுக்கும் மனைவியிடம் சென்று கையேந்தி நிற்கும் நிலைக்குச் சுந்தரநாய்க்கர் தள்ளப்படுகிறார். மேலும், மனைவியின் உதாசீன வார்த்தைகளால் மனஉளைச்சலுக்கு உள்ளானதோடு மனைவியின் விருப்பப்படியே நடந்து கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கும் தள்ளப்படுவதை,

"சட்ட வெள்ளையா இல்லாம வேற நெறத்துல எடுத்திருந்தா நல்லாருக்கும். அழுக்குப் பட்டாத் தெரியாது. துண்டு கொஞ்சம் பெரிசா இருக்கணும். கட்டிக் குளிக்கிறதுக்கு எட்டாது போலருக்கு."

அவள் கோவத்தில் ஏறிட்டுப் பார்த்தாள்.

"நம்ம பெழச்ச பெழப்புக்கு இது போதும். பெரிசா கொற சொல்ல வந்துட்டாரு. எடுத்துக் குடுக்கிறதே பெரிசு உடுத்திக்கிட்டு ஒரு மூலையில உக்காரும்""

(பூமணி, அஞ்ஞாடி, ப.918)

என்ற கருத்தானது புலப்படுத்துகின்றது. கணவன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளுக்குக் கூட மனைவியிடம் கையேந்தி நிற்க வேண்டிய அவல நிலைக்கு உள்ளாகின்ற போக்கினை நாவல்வழி உணரமுடிகின்றது.

மனைவியின் தலைமையில் குடும்பம் நடைபெறுவதால், கணவனுக்குக் கருத்துசுதந்திரம் மறுக்கப்படுவதோடு, குடும்பத்தில் கணவனின் தலையீடு முழுவதுமாகத் துண்டிக்கப்படும் நிலையினை,

"மூத்த பொண்ணுக்குச் சடங்கு வச்சாளே தகப்பங்கிற மொறையில எங்கிட்ட ஒரு வார்த்த கேட்ருப்பாளா. எல்லாம் அவளே முடிவு செஞ்சுக்கிட்டா."

(பூமணி, அஞ்ஞாடி, ப.920)

என்ற வரிகள் இதனை விளக்குகின்றன. கணவனின் உழைப்பும் பாதுகாப்பும் மனைவிக்குத் தேவைபடாத நிலையில் கணவனுக்குரிய மதிப்பு மரியாதையை அளிக்க, மனைவி மறுக்கின்ற போக்கினை 'அஞ்ஞாடி' நாவல்வழி அறியமுடிகின்றது.

**கணவனைக் கீழாக எண்ணல்**

குடும்பத்தில் மனைவி பணக்காரக் குடும்பத்தைச் சார்ந்தவளாக இருந்து, கணவனாக அமையும் ஆண் ஏழைக்குடும்பத்தைச் சார்ந்தவனாக இருந்தால் கணவனை அடக்கி ஒடுக்கும்

போக்கினையே குடும்பத்தில் காணமுடிகிறது. ஒரு பெண் தன் கணவனை மதிக்காமல் பேசுவதும், மரியாதைக் குறைவாக அழைப்பதும், அவனது ஏழ்மையை இயலாமையை எள்ளி நகையாடுவதும் வழக்கத்தில் இருக்கின்ற செயலாகும். இந்நிலை குறித்து ஞானி குறிப்பிடும் பொழுது,

> "ஆணுக்கெதிரான போர்க்குரல் எழுப்புவதைக் காட்டிலும் ஆண்களும் இன்று அடிமைப்பட்டிருப்பதைப் பெண் உரிமை இயக்கங்கள் பேச வேண்டும். காலங்காலமாக அடிமைத்தனத்துக்கு உட்பட்டிருக்கிற பெண்களின் நிலையில் தான் இன்று ஆண்களும் இருக்கிறார்கள் என்பதை ஆண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்"(ரெ.மல்லிகா, தமிழ் நாவல்களில் பெருளாதாரச் சிக்கல்கள், ப.302)

என்று கூறுவது ஆண்களுக்கான உரிமைக்குரலாக அமைகின்றது.

அஞ்ஞாடி நாவலில் வரும் சுந்தரநாய்க்கர் மாமாவின் தோட்டத்தில் வேலை செய்துவருகிறார். மாமன்மகளையே மணம் முடிக்கும் அவர், தொடர்ந்து தோட்டத்தில் வேலைபுரிகின்றார். மங்கத்தாய் அதனை தரக்குறைவாக எண்ணுவதோடு வீட்டிலேயே இருக்க கட்டாயப்படுத்துகிறாள். குடும்பப்பொறுப்புகளை மனைவியே கவனித்துக் கொள்வதால், குடும்பத்தில் எவ்வித அதிகாரமுமின்றி கணவன் அடிமையாக நடத்தப்படுகிறான். குழந்தைகளும் தந்தையிடம் மரியாதையின்றி நடந்துகொள்கின்றனர். குடும்பத்தில் எந்தவித மதிப்பும் மரியாதையுமின்றி பொம்மைப்போல மனைவியாள் கட்டுப்படுத்தி வைக்கப்படுகின்றார். பொருள் சுதந்திரம் பெற்ற மனைவி, கணவனை மதிக்காமல் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஏழ்மைநிலையைச் சுட்டிக்காட்டி கணவனை அவமானப்படுகின்ற போக்கினை,

> "எம் பெழப்பப் பத்தி நல்லாத் தெரிஞ்சுக்கிட்டுத்தான் கைப்புடிச்ச. இப்ப மட்டும் கசக்குதான்னு வெளிப்படையாவே கேட்டுப்புட்டென். அதுக்கு அவ அழுக்கத் தொடச்சு மடியில வச்சாலும் புழுக்கக் கொணம் போகுமான்னு என் நெஞ்சில குத்தி வாங்கீட்டா. எனக்கு அழுகையா வந்துருச்சு. அப்படியே போய்ப்படுத்துட்டென். அதுலருந்து அவகூட சரியாப் பேச்சுவார்த்த கெடையாது. சோறு போட்டு வச்சா சாப்பிட்டுக்கிருவென். வீட்டுலருக்கப் புடிக்காமத்தான் இங்க வாறது. நாலு சனங்க மொகத்தப் பாத்துப் பேசினா மனசாறு மில்ல"
>
> (பூமணி, அஞ்ஞாடி, ப.921)

என்ற வரிகளில் மனைவியால் அடிமையாக நடத்தப்படும் கணவனின் அவலம் குறித்து விளக்கியுள்ளார். மேலும், ஏழ்மையால் ஆண் அவமதிப்புக்கு உள்ளாவதையும் மனதளவில் பாதிப்படைக்கின்ற நிலையினையும் வெளிக்காட்டுவதாக இப்பகுதி அமைகின்றது.

திருமணத்திற்கு முன் கணவனின் வசதியைப் பெரிதாக எண்ணாத மனைவி, குடும்ப உறவில் இணைந்த பின் கணவனின் ஏழ்மைநிலையைக் கருத்தில் கொண்டு கணவனை உதாசீனப்படுத்துகிறாள். அந்தஸ்து வேறுபாட்டால், கணவனை அடிமையாக எண்ணுகின்ற மனநிலைக்கும் தள்ளப்படுகிறாள். கணவனின் ஆதிக்கத்தில் பெண் வாழ வேண்டி வரும்போது அடங்கி நடப்பதும், தன்னைச் சார்ந்து கணவன் வாழத்தலைப்படும் போது அவனை அடக்கி, ஒடுக்குக்கின்றப் போக்கினையும் நாவல் வழி வெளிகாட்டியுள்ளார் பூமணி.

**ஆணாதிக்கப் போக்கு**

கணவன் மனைவியை அடக்கி ஆளவேண்டும் என விரும்புவதும், கணவன் மனைவி உறவில் சிக்கலை ஏற்படுத்துகிறது. பெண்ணின் ஆதிக்க மனப்பான்மையால் குடும்பத்தில் ஏற்படும் சிக்கலைக் காட்டிலும், ஆணாதிக்கப் போக்கினால் குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்கள் அதிகமாக இருப்பதைச் சமூகத்தில் காணமுடிகின்றது. பெண் திருமணத்திற்கு முன்னர் தந்தையின் ஆதிக்கத்திலும், திருமணத்திற்குப் பின் கணவனின் ஆதிக்கத்திலும் கணவனுக்குப் பிறகு பிள்ளைகளின் ஆதிக்கம் என வாழ்நாள் முழுவதும் ஆண்களுக்கு அடிபணிந்தே வாழ வேண்டியவள் ஆகிறாள்.

பெண்ணின் இந்நிலைக்கானக் காரணம் குறித்து மல்லிகா கூறும் பொழுது,

“ஆதிக்கத்தால் உருவாக்கப்பட்ட சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கை முறையானது சிதறடிக்கப்பட்டு விடுகிறது. பெண்ணின் வாழ்க்கையானது அவளது உளநிலையில் தங்கியிராது புறநிலைகளின் மேல் தங்கி விடுகிறது. இதனால் அவள் ஆளுமையும், மனநிலையும் உடைக்கப்பட்டு அவள் உலகை வேறு ஒருவரின் கண்களின் மூலம் பார்க்கத் தலைப்படுகிறாள்."(ரெ.மல்லிகா, தமிழ் நாவல்களில் பெண்களின் இரண்டாந்தரக் குடிநிலையும் மீட்சியும், ப.204)

என்று கூறியிருப்பது பெண்களின் இன்றைய நிலை குறித்து விளக்கும்விதமாய் அமைகின்றது.

பிறகு நாவலில் வரும் வயிரவன், மனைவி முத்துமாரியை அடிமையைப் போல நடத்துகிறான். மனைவி தன்னுடைய வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பவளாக, அடங்கி நடப்பவளாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறான். மனைவி அறியாமையால் செய்யும் தவறுகளுக்குக் கூட அவளைத் துன்புறுத்துகிறான். மனைவியைத் தனக்கும், குடும்பத்திற்கும் பணிவிடை செய்யும் பணிப்பெண்ணாகப் பார்க்கின்ற ஆணாதிக்கப் போக்கே கணவனின் ஆதிக்க மனப்பான்மைக்குக் காரணமாக அமைகின்றது. இதனை,

“இண்ணைக்கு வெள்ளங்காட்டி சோறு போட்டுக்குடுத்தென். சோத்துல ஒரு தலமுடி கெடந்துச்சாம். அந்தக் கழுத இந்தக் கழுதன்னு திட்டி தள்ளீருச்சு. ஊருல ஒலகத்துல இல்லாற சுத்தம் வந்துருச்சாக்கும் இப்ப. நம்ம பெழச்ச பெழப்பு அதுக்குள்ளயா மறந்துபோச்சுனு நான் சொல்லீட்டென். அம்புட்டுத்தான். சோத்துக்கையோட எந்திரிச்சு வெறகுக் கட்டைய எடுத்து அடிச்சது"

(பூமணி, பூமணியின் ஐந்து நாவல்கள், ப.119)

என்ற மனைவியின் அவலமொழியானது ஆணாதிக்கப்போக்கால் பெண் அடையும் துன்பங்களை வெளிப்படுத்தும் விதமாக அமைகின்றது. மனைவிக்குக் கருத்து சுதந்திரம் மறுக்கப்படுகின்ற சூழலும், குடும்பத் தேவையை நிறைவு செய்யும் பணிப்பெண்ணாகப் பார்க்கப்படுகின்ற நிலையினையும் நாவல்வழி புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

**குழந்தையின்மை**

திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பது ஆன்றோர் வாக்கு. குடும்பவாழ்வின் பயன் பிள்ளைப்பேற்றால் சிறப்படைகிறது. குழந்தைச் செல்வங்களைப் பெறுவதன் மூலமே

இல்லறம் சிறப்படைகிறது. குழந்தைச்செல்வம் உடையவர்களையே சமுதாயமும் மதிக்கின்றது. குழந்தைப்பேறு குறித்து வள்ளுவர்,

"மங்கலம்என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" - குறள். 60

என்ற குறட்பா வழி எடுத்துரைக்கிறார். குழந்தையின் சிறப்பினை,

"குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே" - புறம். 188 3-7

என்ற வரிகளில் குழந்தையில்லையெனில் மானிட வாழ்வில் பயனில்லை என்பதை என்ற புறநானூற்றுப் பாடலும் விளக்குகின்றது.

இல்லறத்தை நல்லறமாக மாற்றுகின்ற சிறப்புடையது குழந்தைப்பேறு ஆகும். குடும்பத்தை வாழையடி வாழையாக தழைக்கச் செய்யும் விருட்சமாக குழந்தைச்செல்வம் விளங்குகின்றது. அத்தகைய குழந்தைச்செல்வம் இல்லாதவரைப் பழித்தூற்றுக்கின்ற இழிநிலையைச் சமூகத்தில் இன்றளவும் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

- கணவன்-மனைவி உறவுச்சிக்கலைத் தோற்றுவிக்கும் காரணியாக ஒழுக்கக்குறைவு, சந்தேகக் குணம், தீய பழக்கவழக்கங்கள், ஆதிக்க உணர்வு போன்றவை இருபாலரிடமும் காணப்படுவது காரணமாகின்றது. குழந்தையின்மையால் பெண் கணவனால் நிராகரிக்கப்படுகின்ற நிலையும், கணவன்-மனைவி பிரிவுக்கு முக்கிய காரணியாகிறது.
- தந்தை-மகன் உறவுச் சிக்கலுக்கு மகனின் சுயநலப்போக்கு, குடும்பத்தைக் காக்காதப் பொறுப்பற்ற நிலை, தீயப்பழக்கங்களுக்கு அடிமையாதல் போன்ற செயல்கள் தந்தைக்கும் மகனுக்குமான உறவில் விரிசலை உண்டாக்குகின்றன.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**வினோத்குமார். க " பூமணியின் நாவல்களில் குடும்பச் சிக்கல்கள்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 3, சூலை 2022, பக். 28-39

**Cite this Article in English**

**Vinodhkumar.K " Family Issues in Poomani's Novels"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 3, July 2022, pp. 28-39